நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 45/2025

<u>அ.த.சா: 1 (LW–1 )சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சுந்தர்ராஜ் | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

03–08–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(எதிரிகள் ஆஜர்,

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் : 12.56 பி.ப.

நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.05.2024 ம் தேதி காலை 6.30 மணியவில் நான் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தபோது நான் மற்றும் சார்பு ஆய்வாளர், முதல்நிலைக்காவலர் 814 திரு. ராஜா, முதல்நிலைக்காவலர் 810 திரு.சின்னப்பாண்டி ஆகியோர்கள் புகயிலை வழக்கு ச ம்மந்தமாக காவல் நிலையத்தில் இருந்து காலை 6.45 மணியளவில் புறப்பட்டு எதிரி கணேஷ்குமார், த.பெ.சக்திவேல் அரச மரத்தெரு, கடமலைக்குண்டு என்பவரின் வீட்டிற்கு சென்று எங்களை அறிமுகம் செய்துகொண்டு ரகசிய தகவலின்படி அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை வைத்திருப்பதாக கூறி அவர் வீட்டை சோதனை செய்தபோது வீட்டு

முன்வாசலில் 3 வெள்ளைநிற சாக்குமூட்டைகள் இருந்தன். அந்த சாக்கு மூட்டைகளை சோதனை செய்தபோது 225 கிராம் எடையுள்ள 55 பெரிய பண்டல்கள் உள்ள 20 கணேஷ் புகையிலை பாக்கெட்டுகளும், 16.875 எடையுள்ள 15 கிராம் எடைகொண்ட 1125 கணேஷ் புகையிலை பாக்கெட்டுகளும் மற்றும் 100.8 கிராம் எடையுள்ள 27 கூலிப் பாக்கெட்டுகளும் மொத்தம் 2.721 கிலோ கிராம் எடையுள்ள புகையிலை பாக்கெட்டுகள் ஒரு வெள்ளை நிற சாக்கு மூட்டையில் இருந்தது. அந்த புகையிலை பொருட்கள் அரசால் தடைசெய்யப்பட்ட மற்றும் மனித உடலுக்கும் உயிருக்கும் தீங்கு விளைவிக்கும் மற்றும் நச்சுத் தன்மையுள்ள புகையிலை பாக்கெட்டுகளை வைத்திருந்ததாக 7.15 மணிக்கு எதிரி கணேஷ்குமாரை கைது செய்து தனிநபர் சாட்சிகள் முன்வராததால் உடன் இருந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்ட எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று எதிரியிடம் கையொப்பம் பெற்று ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். அதில் இருந்து 15 கிராம் எடையுள்ள கணேஷ் புகையிலையை கைப்பற்றி S1 எனக் குறியீடு செய்யப்பட்டு விபரங்கள் எழுதப்பட்டு ஒட்டப்பட்து. அதில் இருந்து 12.6 கிராம் எடையுள்ள கூல் லிப் கைப்பற்றி S2 எனக் குறியீடு செய்யப்பட்டு விபரங்கள் எழுதப்பட்டு ஒட்டப்பட்து. மேற்கூறிய வழக்கு சொத்தினை கைப்பற்றி சார்பு ஆய்வாளர் ரெங்கராஜ் 8.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த முதல் அத்தாட்சி **அ.சா.ஆ.2** ஆகும். அதில் இருந்து 15 கிராம் எடையுள்ள கணேஷ் புகையிலையை கைப்பற்றி S3 எனக் குறியீடு செய்யப்பட்டு விபரங்கள் எழுதப்பட்டு ஒட்டப்பட்து. 1வது எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் காந்தி மகன் மகாலிங்கம் என்பவர் வீட்டிற்கு 9.30 மணிக்கு சென்று மகாலிங்கத்திடம் சார்பு ஆய்வாளர் விசாரித்தார். எதிரி மகாலிங்கம் தாமாகவே வீட்டினுள் இருந்த 3 வெள்ளைநிற சாக்குமூட்டைகளை ஆஜர் செய்தார். பிரித்து பார்த்த போது அரசால் தடைசெய்யப்பட்ட கணேஷ் புகையிலை 225 கிராம் எடையுள்ள 55 கணேஷ்

புகையிலை பாக்கெட்டுகள் மற்றும் 165 கணேஷ் புகையிலை பெரிய பண்டல்கள் 15 கிராம் எடைகொண்ட 2475 கணேஷ் புகையிலை பாக்கெட்டுகள் இவை அனைத்து மனித உயிருக்கும் உடலுக்கும் கேடு விளைவிக்கும் பாக்கெட்டுகளை வைத்திருந்தார். எதிரி மகாலிங்கத்தை காலை 10.00 மணிக்கு கைது செய்தோம். அதன் மொத்த எடை 37,125 கிலோகிராம் எடை ஆகும். 10.15 மணியளவில் மேற்படி வழக்கு சொத்துகளை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவது தான். அந்த அத்தாட்சியில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கடமலைக்குண்டில் பால்சாமி மகன்வேல்முருகன் என்பவர் வீட்டிற்கு சென்று பார்த்தபோது யாரும் இல்லை. மேற்படி 2 எதிரிகளையும், வழக்கு சொத்துக்களையும் கைப்பற்றி 11.50 மணிக்கு காவல்நிலையம் வந்து கடமலைக்குண்டு காவல்நிலைய கு.எண்.176/2024 சட்டபிரிவு 6(b) r/w 24 (1) of COTPA மற்றும் 273, 328 ன் படி வழக்கு பதிவு செய்து 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் G.உசிலம்பட்டி ராமலிங்காபுரம் கிழக்கு தெருவைச் சேர்ந்த சுப்பு கவுண்டர் மகன் பால்பாண்டி என்பவர் வீட்டிற்கு 13.00 மணிக்கு சென்று அவர் பெட்டிக்கடையில் வைத்திருந்த அவர் தானாக முன்வந்து 5 சாக்கு மூட்டையில் உள்ள அரசால் தடைசெய்யப்பட்ட உடலுக்கும் உயிருக்கும் தீங்கு விளைவிக்கும் கணேஷ் புகையிலை 275 பாக்கெட்டுகள் மொத்த எடையுள்ள 61.875 கிலோ கிராம் 15 கிராம் எடைகொண்ட 4175 கணேஷ் புகையிலை பாக்கெட்டுகள் கைப்பற்றி அவற்றை வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மகாலிங்கத்தை 13.25 மணிக்கு கைது செய்து எதிரிகளிடம் கைப்பற்றப்பட்ட புகையிலையில் இருந்து 15 கிராம், எடையுள்ள கணேஷ் புகையிலை மாதிரி S4 குறியிட்டு விரபங்கள் எழுதி ஒட்டப்பட்டது. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் எதிரியையும் 15.00 மணிக்கு நிலையம் கொண்டுவரப்பெற்றது. மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காட்டப்படும்

புகைப்படங்கள் அன்றைய தினம் கைப்பற்றப்பட்ட புகையிலை பாக்கெட்டுகளுக்கான புகைப்படங்கள் ஆகும். அந்த புகைப்படங்கள் எண்ணம் 1 முதல் 10 **அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.14** ஆகும். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

சார்பு ஆய்வாளர் அழைத்ததின் பேரில் தான் நான் அவருடன் சென்றேன் என்றால் சரிதான். நான், சார்பு ஆய்வாளர் ஆய்வுக்கு சென்றபோது ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் தெரியாது. பொதுவாக ஆய்வுக்கு எங்கெங்கு செல்கிறோம் என்பதை குறிப்பதற்கு பாக்கெட் டைரி குறிப்போம் என்றால் சரிதான். அன்றைய தினத்திற்கான பாக்கெட் டைரியை சார்பு ஆய்வாளரிடம் ஒப்டைத்தேனா என்றால் அந்த புத்தகம் முடியும் போது அதை ஒப்படைப்பேன். இந்த வழக்கிற்கு எவ்வளவு நாட்களுக்கு பிறகு பாக்கெட் டைரி ஒப்படைக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. 1ம் எதிரி வீட்டைச் சுற்றி பலவீடுகள் உள்ளது என்றால் சரிதான். கடமலைக்குண்டு நடுப்பகுதியில் 1ம் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ நேரம் காலை என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்திருக்கும் என்றால் இல்லை. 1ம் எதிரி வீட்டைச் சுற்றி பள்ளி, கல்லூரி இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு நேரம் பதிவு செய்யப்பட்டது என்றால் 1 ¼ மணி நேரம் இருக்கும். ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி எழுதினார். 1, 2, 4 எதிரிகளிடம் இருந்து கைப்பபற்றப்பட்ட புகையிலைகளுக்கான அத்தாட்சி சார்பு ஆய்வாளர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரையிலான அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். 1வது எதிரி வீட்டில் இருந்து நேரடியாக 2ம் எதிரி வீட்டிற்கு சென்றுவிட்டோம். 2ம் எதிரியின் வீட்டின் தலைவாசல் கிழக்கு நோக்கி உள்ளது. அவர் வீட்டைச் சுற்றி குறைவான வீடுகள் தான் உள்ளது. 1ம் எதிரி, 2ம் எதிரியிடம் தயார் செய்த அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகளை சாட்சி கையொப்பம் செய்ய உதவி ஆய்வாளர் அழைத்தாரா என்றால் அழைத்தார். அவர் யாரை அழைத்தார்கள் என்றால் பெயர் சொல்ல தெரியாது. 2ம் எதிரி வீட்டிற்கும் வி.ஏ,ஓ

அலுவலகத்திற்கும் இடையே 50 மீ தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல சுமார் 800 மீட்டர் இருக்கும். பொதுவாக வி.ஏ.ஓ அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு வந்துவிடுவார்கள் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது காலை 10.15 மணிக்கு தான் 2ம் எதிரியிடம் இருந்து அத்தாட்சி தயாரிக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அ.சா.ஆ.3 ல் காலை 10.00 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலேயே S1, S2, முத்திரைகள் பதிக்கப்பட்டன. 1வது எதிரி தேனியில் இருந்து வாங்கி வைத்திருப்பதாக தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. 2 வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போது யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் நான், ராஜா, சின்னபாண்டி மற்றும் உதவி ஆய்வாளர் மற்றும் எதிரியும் கையொப்பம் செய்தார். என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது நாங்கள் வேல்முருகன் வீட்டிற்கு சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1 , 2, 4 வது எதிரிகளிடம் இருந்து பொருட்களை கைப்பற்றும்போது போட்டோ, வீடியோ எடுக்கவில்லை என்றால் சரியல்ல புகைப்படம் காவல்நிலையத்தில் வைத்து எடுத்தோம். அ.சா.ஆ.5 முதல் 14 புகைப்படங்களில் உள்ள வெள்ளைநிற பை சாதாரணமாக எல்லா கடைகளிலும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். நான் கைப்பற்றிய பொருட்களின் காலாவதி நாட்கள் பற்றி கவனிக்கவில்லை. நான் சொன்னதுபோல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் மேலதிகாரிகள் கேட்டுக்கொணடதற்கிணங்க பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 2.35 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.03 18:28:48 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 03-08-2025